17.03.2025 S.C.No.138 of 2017 P.W. 13 – Selvi @ Senthamarai

(A1 to A6 present)

Crl.M.P.No. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.22 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: என் மகள் பவித்ரா பணியாற்றிய கம்பெனியில் வேலை செய்த ஷமில் பாஷாவை அந்த சமயத்திலிருந்தே எனக்கு அவரை தெரியும் என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: அந்த சமயத்தில் ஷமீல் பாஷாவுக்கு திருமணமாகியிருந்தது என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: 27.05.2015 ஷமீல் பாஷா எனக்கு இரவு 11.00 மணிக்கு போன் செய்தார்என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: என் மகள் பவித்ராவை தேடி பார்த்து கிடைக்காததால் நாங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் 24.05.2015 புகார் கொடுத்தோம் என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: உங்களுக்கு போன் வந்ததற்கு அடுத்த நாள் ஷமீல் பாஷாவை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: நாங்கள் புகார் கொடுத்த நாளிலிருந்து பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பணியிலிருந்த ரவி எஸ்எஸ்ஐ தான் விசாரித்தார் என்றால் ?

பதில்: சரிதான். விசாரித்தார்.

கேள்வி: எஸ்எஸ்ஐ ரவி என்னை விசாரித்தாரா என்றால் ?

பதில்: இல்லை.

கேள்வி: என் மருமகன் பழனியை எஸ்எஸ்ஐ ரவி விசாரித்தாரா என்றால் ?

பதில்: ஆமாம். விசாரித்தார்.

கேள்வி: எஸ்எஸ்ஐ ரவி விசாரித்தபோது எழுதிக்கொண்டாரா என்றால் ?

பதில்: அது பற்றி எனக்கு தெரியாது.

கேள்வி: அப்போது நான் காவல் நிலையத்திற்கு வெளியே இருந்தேன் என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: எஸ்எஸ்ஐ ரவி எனக்கு தெரிந்து யார் யாரை விசாரித்தார் என்றால்?

பதில்: என் மருமகன் பழனியை விசாரித்தார். வேறு யாரை விசாரித்தார் என்று தெரியாது. ஆனால் என்னை விசாரிக்கவில்லை.

கேள்வி: நான் என்ன படித்துள்ளேன் என்றால்?

பதில்: நான் படிக்கவில்லை.

கேள்வி: உயர் நீதிமன்றத்தில் எனது மருமகன் பழனி வழக்கு போட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: அந்த விஷயங்கள் எனக்கு தெரியுமா என்றால் ?

பதில்: தெரியாது.

கேள்வி: நீங்கள் புகார் கொடுத்ததிலிருந்து தொடர்ந்து ஒரு இரண்டு மூன்று நாட்கள் ஷமீல் பாஷாவை விசாரித்தார்கள் என்றால் ?

பதில்: 16.06.2015 அன்று மதியம் 02.00 மணிக்குதான் ஷமீல் பாஷாவை

அவரது மாமனார் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார். 16.06.2015 அன்றும் மறுநாள் 17.06.2015 அன்றும் ஷமீல் பாஷாவை காவல் நிலையத்தில் விசாரித்திருந்தார்கள் அதை நான் பார்த்தேன். ஒரு நாள் இடைவெளி விட்டு 19.06.2015 அன்று நாள் காவல் நிலையம் சென்று மார்டின் சாரை கேட்டபோது அவரை விசாரித்து அனுப்பிவிட்டதாகவும் என்னை போக சொன்னார் நான் வந்துவிட்டேன்.

கேள்வி: 19.06.2015 க்கு முன் மார்டின் பெயர் எப்படி தெரியும் என்றால்?

பதில்: எஸ்எஸ்ஐ ரவி மற்றும் என்னுடைய தம்பி பழனி சொல்லி எனக்கு தெரியும்.

கேள்வி: என்னுடைய மருமகனை எஸ்எஸ்ஐ ரவி விசாரித்தபோது ஏதேனும் எழுதி வாங்கினார்களா என்று நான் கேட்டேனா என்றால் ?

பதில்: இல்லை.

கேள்வி: நீதிமன்றத்திற்கு இன்று வந்து எங்கு காத்திருந்தேன் என்றால் ?

பதில்: அரசு தரப்பு வழக்கறிஞர் அறையில் உட்கார்ந்திருந்தேன்.

கேள்வி: ஏற்கனவே நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்தபோது எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் ?

பதில்: மதியம் 01.00 மணிக்கு வந்தேன்.

கேள்வி: என்னுடைய மருமகன் எந்த ஊர் என்றால் ?

பதில்: குச்சிப்பாளையம்.

கேள்வி: என் மருமகனும் அரசு தரப்பு வழக்கறிஞரும் குச்சிப்பாளையத்தை சேர்ந்தவர்கள் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

பதில்: நான் பொய் சாட்சியம் சொல்லவில்லை. பொய்யில்லாத சாட்சியம் சொல்லவில்லை. நான் உண்மையைதான் சொல்கிறேன்.

கேள்வி: மார்டின் என்பவரை நான் பார்க்கவில்லை என்றும் நீதிமன்றத்தில் சிபிசிஜடி போலீசார் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் சொல்லிக்கொடுத்து மார்டின் அவர்களை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

பதில்: நான் உண்மையைதான் சொல்கிறேன் என்று சாட்சி வேகமாக சத்தமாக அவர் எடுத்துரைக்கிறார்.

கேள்வி: நான் விசாரித்ததாக சொல்லும் தேதியில் மார்டின் பிரேம்ராஜ் அன்றைய தினம் வேறு பணியில் இருந்ததனால் அவரை தாங்கள் பார்த்ததாக, கேட்டதாக சொல்லுவது போலீசார் சொல்லிக்கொடுத்தது போல் இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

பதில்: இல்லை. நான் உண்மையைத்தான் சொல்கிறேன். நானும் என்னுடைய கணவரும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இரண்டு நாட்கள் இருந்தோம்.

## 2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

## 5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

பவித்ரா காணாமல் போன பிறகு நான் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு எத்தனை முறை சென்றோம் என்றால் பலமுறை சென்றுள்ளேன். தோராயமாக ஒரு வாரமாக அங்கு சென்ற வந்தேன்.

அந்த ஒரு வார காலம் நான் சென்று வந்தபோது காவல் நிலையத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்திற்கு நாங்கள் சென்றபோது அங்கு நிறைய பேர் வந்திருப்பார்கள் சென்றிருப்பார்கள் என்றும் அவர்களை பற்றி என்னால் அடையாளம் காண இயலாது என்றால் அனைவரையும் அடையாளம் காட்ட இயலாது என்றால் சரிதான். ஆனால் ஒரு சில பேர் மனதில் பதிந்துள்ளார்கள்.

காவல் நிலையத்தில் ரவி என்பவரை பார்த்தேனா என்றால் பார்த்தேன் அவர் ஆய்வாளர். சிபிசிஐடி போலீசார் சொல்லிக்கொடுத்துதான் அவர்களின் பெயரை சொல்கிறேன் என்றால் போலீசார் சொல்லிக்கொடுத்து நான் சொல்லவில்லை. நான் காலையிலிருந்து சிபிசிஐடி போலீசாரை பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. போலீசார் எந்த தேதியில் எப்போது விசாரித்தார்கள் என்று தெரியாது. போலீசார் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மகளின் வாழ்க்கைக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன்.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மதியம் 02.55 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.17 17:22:06 +0530